இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 299 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – வைகாசி 27 – புதன்கிழமை 10 ஜூன் 2026 – சென்னை 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 299: Thiruvalluvar Year - 2057 - Vaikasi 27 - Wednesday 10 June 2026 - Chennai 12 Pages ₹ 5.00

### கூட்டணிக் கட்சிகளை காங்கிரஸ் மதிக்கவில்லை!

## தி.மு.க. உடனான கூட்டணியை காங்கிரஸ் முறித்தது தவறு!

### அகிலேஷ் யாதவ் கடும் விமர்சனம்!



புதுடெல்லி, ஜூன் 10 - தமிழ்நாட்டின் அரசியல் சூழலை உணராமல் தி.மு.க.வுடனான கூட்டணியை காங்கிரஸ் முறித்தது தவறான செயல் என இந்தியா கூட்டணி கூட்டத்தில் சமாஜ்வாதி கட்சித் தலைவர் அகிலேஷ் குற்றஞ்சாட்டியுள்ளார். டெல்லியில் நடைபெற்ற இந்தியா கூட்டணி கூட்டத்தில் காங்கிரஸை கூட்டணிக் கட்சிகள் கடுமையாக விமர்சித்துள்ளன.

டெல்லியில் நடைபெற்ற இந்தியா கூட்டணி கட்சிகளின் தலைவர்கள் கூட்டத்தில் பேசிய சமாஜ்வாதி கட்சித்தலைவர் அகிலேஷ் யாதவ், கூட்டணிக் கட்சிகளை காங்கிரஸ் மதிப்பது கிடையாது என குற்றஞ்சாட்டியுள்ளார். தி.மு.க. உடனான கூட்டணியை காங்கிரஸ் முறித்தது தவறு என்றும் அவர் கடுமையாக விமர்சித்துள்ளார்.

காங்கிரஸ் தலைவர்கள் பெருந்தன்மையோடு நடந்து கொள்ள வேண்டும் என்றும் அகிலேஷ் யாதவ் வலியுறுத்தினார். இந்தியா கூட்டணி கட்சிகளின் கூட்டத்தில், அகிலேஷ் யாதவின் குற்றச்சாட்டை தேசியவாத காங்கிரஸ் எம்.பி. சுப்ரியா சுலே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட்சி எம்.பி. ஜான் பிரிட்டாஸ் ஆகியோர் வழிமொழிந்தனர்.

கூட்டத்தில் பேசிய ஜான் பிரிட்டாஸ், அமைச்சர் பதவி, மாநிலங்களவை எம்.பி. பதவிக்காக தி.மு.க.வுடனான கூட்டணியை காங்கிரஸ் முறித்துவிட்டது என்றும் கடுமையாக விமர்சித்தார். அமைச்சர் பதவிக்காக தி.மு.க. கூட்டணியிலிருந்து காங்கிரஸ் வெளியேறியது துயரமானது என்றும் ஜான் பிரிட்டாஸ் கூட்டத்தில் பேசியுள்ளார்.

### ஆட்சிக் கலைப்பு – கவிழ்ப்பு என்பது தி.மு.க.வின் நிலைப்பாடு அல்ல; மக்கள்தான் களைத்துப் போய்விட்டார்கள்!

# கழகத் தலைவரின் பேச்சைத் திரித்துப் பரப்புவதா?

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு கண்டனம்!

**சென்னை, ஜூன் 10 -**

**"கழகத் தலைவர் அவர்களது பேச்சைத் திரித்துப் பரப்புகிறார்கள்" "ஆட்சிக் கலைப்பு - கவிழ்ப்பு என்பது எங்கள் நிலைப்பாடு அல்ல; மக்கள்தான் களைத்துப் போய்விட்டார்கள்" என்று விருதுநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**



இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு :-

தமிழ்நாட்டில் புதிதாக ஒரு ஆட்சி அமைந்து ஒரு மாதம் ஆகிறது. இந்த ஒரு மாதமும் டிவியைப் பார்த்தாலும் நாளிதழ்களைத் திருப்பினாலும் கொலையும், கொள்ளையும், பாலியல் வன்கொடுமைகளும், போதை மருந்து நடமாட்டமும் தான் செய்திகளாக இருக்கின்றன. பல்வேறு குற்றச் சம்பவங்களில் ஆளும் கட்சியான த.வெ.க. நிர்வாகிகளே சம்பந்தப்பட்டு உள்ளனர்.

ஆளும்கட்சியைச் சேர்ந்த பெண் ஒருவர், சொந்தக் கட்சிக்காரர்களால் பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு, அவர்கள் கைது செய்யப்பட்டுள்ளார்கள். அந்தப் பெண்ணால் குற்றம் சாட்டப்படும் ஆளும் கட்சி எம்.எல்.ஏ. மீது இதுவரை நடவடிக்கை இல்லை. ஆனால் பாதிக்கப்பட்ட பெண்ணைக் கட்சியை விட்டு நீக்கி இருக்கிறது தூய சக்தி என்று கபட வேடம் போடும் அரசு.

**திரித்து செய்தி பரப்பப்படுகிறது!**

"இந்த ஆட்சியை ஆறு மாதம் விமர்சிக்க மாட்டோம்" என்று எங்கள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லியிருந்தாலும், நிலைமை மிக மோசமாகப் போய்வரும் நிலையில் அவர் விமர்சனம் செய்தார். "ஆறு மாதம் அல்ல, மூன்று மாதம் கூட தாங்காது என்ற நிலைமையில் தான் ஆட்சி போய்க்கொண்டு இருக்கிறது" என்று தலைவர் அவர்கள் பேசினார்கள்.

ஆனால், மூன்று மாதத்தில் இந்த ஆட்சி கவிழ்ந்துவிடும் என்று அவர் சொன்னதாகத் திரித்து செய்தி பரப்பப்படுகிறது.

இதுகுறித்து பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்கள் செய்தியாளர்கள் கேட்டபோது, தி.மு.க. தலைவர் அப்படி பேசியிருக்கக் கூடாது என்று பேசி உள்ளனர். ஆட்சி கவிழும் என்று தலைவர் அவர்கள் பேசவுமில்லை; அது அவரது நிலைப்பாடும் அல்ல!

"ஆறு மாதம் வரை, இந்த ஆட்சி பற்றி விமர்சித்துப் பேசப் போவதில்லை" என்று அவர் சொல்லியிருந்தார். ஆனால் நாள்தோறும் கொலை, கொள்ளை, அரிவாள் வெட்டுகள், போதை மருந்துகள் நடமாட்டம், பெட்ரோல் குண்டு வீச்சுகள், மின்வெட்டு, விவசாயிகள் போராட்டம், பாலியல் வன்கொடுமைகள் நடப்பதைப் பார்க்கும் போது, இதை விமர்சிக்காமல் எப்படி இருக்க முடியும் என்ற பொருளில், "மூன்று மாதமாவது தாங்குமா என்ற கேள்விக்குறியோடுதான் ஆட்சி நடந்துகொண்டிருக்கிறது" என்று பொருள்படும்படிதான் சொன்னார்கள்.

**சமூக வலைதளங்களில் அரசுக்கு எதிரான கருத்துகள்!**

ஆசை அறுபது நாள் என்பார்கள். ஆனால் இன்றைய ஆளும் கட்சிக்கு வாக்களித்தவர்கள் ஒரு வாரம் தான் அமைதியாக இருந்தார்கள். சமூக வலைதளங்கள் முழுக்கவே ஆளும் கட்சிக்கு எதிரான ஆவேசமான கருத்துகளைத் தான் மக்கள் சொல்லி வருகிறார்கள்.

இதைத்தான் தலைவர் அவர்கள் தனது உரையில் சுட்டிக் காட்டினார்கள். கலைப்பு, கவிழ்ப்பு எண்ணத்தோடு அல்ல. மக்களே களைத்துப் போய்விட்டார்கள் அதற்குள்!

இவ்வாறு முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### த.வெ.க. அரசின் அலட்சியத்தால்

## கட்டுமானப் பொருட்களின் விலை உயர்வு!

சென்னை, ஜூன் 10–

த.வெ.க. அரசின் அலட்சியப் போக்கால் தமிழகத்தில் கட்டுமானப் பொருட்களின் விலை வரலாறு காணாத உயர்வை சந்தித்துள்ளது. ஜல்லி, எம்.சாண்ட், பி.சாண்ட் உள்ளிட்ட முக்கிய கட்டுமானப் பொருட்களின் விலை யூனிட்டுக்கு ரூ.1000 வரை அதிகரித்துள்ளது பொதுமக்கள் மத்தியில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. மேற்காசிய நாடுகளில் நிலவும் போர் பதற்றம் காரணமாக, வளைகுடா நாடுகளில் இருந்து எரிபொருள் இறக்குமதி பாதிக்கப்பட்டுள்ளது. இதன் விளைவாக, பெட்ரோல், டீசல், எரிவாயு ஆகியவற்றின் விலை கடுமையாக உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வு, கட்டுமானப் பொருட்கள் உற்பத்தியை பெரிதும் பாதித்துள்ளது.

இதன் தொடர்ச்சியாக, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் ஜல்லி, எம்.சாண்ட், பி.சாண்ட் ஆகியவற்றின் விலைகள் தாறுமாறாக உயர்த்தப்பட்டுள்ளன. இந்த இக்கட்டான சூழ்நிலையில் தமிழகத்தில் புதிதாக பொறுப்பேற்றுள்ள முதல்வர் விஜய் தலைமையிலான த.வெ.க. ஆட்சியில், முறைகேடாக இயங்குவதாக கூறி பல குவாரிகளை மூடிவிட்டனர். உரிய ஆய்வு நடத்தி தவறு நடக்கும்பட்சத்தில் அவற்றின் மீது அபராதம் விதிக்கலாம் அல்லது உரிய நடவடிக்கை எடுக்கலாம். அதை விடுத்து பல குவாரிகளை ஒரே நேரத்தில் மூடியதால் உற்பத்தி தடைபட்டு தற்போது பெரிய அளவில் பொதுமக்களுக்கு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

### #SofaModel அரசின் தோல்விகளை ஒளிபரப்பியதால்

## செய்திச் சேனல்கள் - அரசு கேபிளிலிருந்து நீக்கம்!

### சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனம்!

**சென்னை,ஜூன்.10-**

**#SofaModel அரசின் தோல்விகளை ஒளிபரப்பியதால் செய்தி சேனல்கள் முடக்கம் என்று எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கண்டனத்தை தெரிவித்துள்ளார்.**

**இதுகுறித்து அவர் சமூகவலைதளப் பதிவில் குறிப்பிட்டதாவது:**

தமிழ்நாட்டில் #SofaModel அரசின் தோல்விகளை ஒளிபரப்பிய காரணத்திற்காக 3 செய்தி சேனல்களை அரசு கேபிளில் நீக்கி இருப்பதை வன்மையாக கண்டிக்கிறோம்.

Reels Contentற்காக, "என்னை எவ்வளவு வேணும்னாலும் விமர்சிங்க" என்று Punch Dialogue



பேசிய முதலமைச்சர், அவரது ஆட்சியின் குறைகளைச் சுட்டிக்காட்டும் செய்தி சேனல்களை முடக்குவதை ஏற்க முடியாது.

மின் வெட்டினால் பொதுமக்கள் படும் அவதி, தொடரும் பாலியல் வன்கொடுமைகள், சட்டம் ஒழுங்கு சீர்கேடு உள்ளிட்ட செய்திகளை ஒளிபரப்பினால், பாசிசத்தின் மற்றொரு Version ஆக, ஊடகங்களின் குரல்வளையை நெரிக்கிறது தமிழ்நாடு அரசு!

ஒளிபரப்பு நிறுத்தப்பட்டதற்கு அரசுத் தரப்பில் வேறு காரணம் சொல்லப்பட்டாலும், அரசை விமர்சிக்காத மற்ற சேனல்களுக்கு எந்தச் சிக்கலும் இல்லை.

ஊடகங்களை முடக்கினால் உண்மைகளை மறைத்து விடலாம் என்ற எண்ணத்தை கைவிட்டு, நீக்கப்பட்ட சேனல்களின் ஒளிபரப்பு தொடர அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.

## சென்னை புறநகரில் பரவலாக மழை!

சென்னை, ஜூன் 10- சென்னை மற்றும் புறநகரில் பரவலாக மழை பெய்தது. காலை முதல் வெய்யில் வாட்டி வதைத்து வந்த நிலையில், இரவில் பரவலாக சாரல் மழை பெய்தது.

கோடை காலத்தின் கத்தரி வெய்யில் முடிந்த பிறகும் தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் வெய்யிலின் தாக்கம் இருந்து வந்தது. வேலூர், சென்னை மீனம்பாக்கம், நுங்கம்பாக்கம், திருத்தணி உள்ளிட்ட இடங்களில் 100 டிகிரி ஃபாரன்ஹீட்டுக்கும் அதிகமாக வெப்பம் பதிவானது.

சென்னையிலும் அதிக அளவிலான வெப்பம் பதிவான நிலையில், இன்று இரவு திடீரென மழை பெய்து வருகிறது. சென்னையில் கோயம்பேடு, அண்ணாநகர், முகப்பேர், ஈக்காட்டுத்தாங்கல், கிண்டி, தியாகராய நகர் உள்ளிட்ட இடங்களில் சாரல் மழை பெய்தது. புறநகர் பகுதிகளான அம்பத்தூர், பருத்திப்பட்டு, மதுரவாயல், வானகரம், பூவிருந்தவல்லி, திருமுல்லைவாயல் உள்ளிட்ட இடங்களில் மழை பெய்தது.

சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், "தமிழ்நாட்டில் அடுத்த 3 மணிநேரத்திற்கு (இரவு 10 மணி வரை) கோவை, திண்டுக்கல், கன்னியாகுமரி, சேலம், தென்காசி, தேனி, நீலகிரி, நெல்லை, திருப்பூர் மற்றும் விருதுநகர் ஆகிய பகுதிகளில் இடி, மின்னலுடன் கூடிய லேசானது முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்பு" உள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

### முதல்வர் பெண்களுக்கு பாதுகாப்பான ஆட்சி தருவோம் என்கிறார் – ஆனால்

## நிலைமை அதற்கு மாறாக உள்ளது!

### மதுரை அமர்வு நீதிபதி காட்டம்!

மதுரை,ஜூன்.10-

தமிழ்நாடு முதல்வர் பெண்களுக்கு பாதுகாப்பான ஆட்சி தருவோம் என்கிறார். ஆனால் நிலைமை அதற்கு மாறாக உள்ளது என்று மதுரை அமர்வு நீதிபதி விக்டோரியா கௌரி காட்டமாக கருத்து தெரிவித்துள்ளார்.

பெண்ணை காதலித்து ஏமாற்றியதாக காவல்துறை தொல்லை தருவதாக இளைஞர் தொடர்ந்த வழக்கில் கருத்து தெரிவித்துள்ளார்.

வழக்கில் ஒரு பெண் பாதிக்கப்பட்டுள்ளார்; அவரது உடல்நலம் குறித்து அறிக்கை கேட்டேன். இளம்பெண் உடல்நலம் குறித்த அறிக்கைக்கு பதில் கருக்கலைப்பு குறித்து அறிக்கை அளித்ததால் நீதிபதி அதிர்ச்சி அடைந்துள்ளார்.

### மின்வெட்டுப் பிரச்சினையை திசை திருப்ப

## 'ஹார்ட் டிஸ்க்' திருட்டுப் பிரச்சினையை கிளப்பும் த.வெ.க. அரசு!

### 'தி இந்து' நாளேடு அம்பலம்!

சென்னை, ஜூன் 10- தமிழ்நாடு மின் விநியோகக் கழக தலைமையகத்திலிருந்து திருடப்பட்டதாகக் கூறப்பட்ட ஹார்ட் டிஸ்க்குகளில் முக்கிய ஆவணங்கள் எதுவும் இல்லை என 'தி இந்து' ஆங்கில நாளேடு கட்டுரை வெளியிட்டுள்ளது. இதன் மூலம், மின்வெட்டு பிரச்சினையை திசை திருப்பும் த.வெ.க. அரசின் முயற்சி தோல்வியைத் தழுவியுள்ளது.

'தி இந்து' ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள சிறப்பு செய்தியில், சென்னையில் உள்ள தமிழ்நாடு மின் விநியோக கழக தலைமையகத்தில், கடந்த மே மாதத்தில் 18 ஹார்ட் டிஸ்குகள் மாயமானதாகவும்,

இந்த ஹார்ட் டிஸ்குகள் திருட்டு குறித்து, காவல்துறையில் புகார் அளிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த ஹார்ட் டிஸ்குகளில் மின்துறை தொடர்பான முக்கிய ஆவணங்கள் இருந்தாகவும் கூறப்பட்டது என்றும், அதே நேரத்தில் ஹார்ட் டிஸ்குகள் திருட்டு விவகாரம், மின்வெட்டை திசை திருப்பும் முயற்சி என்றும் விமர்சனங்கள் எழுந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வழக்கை விசாரணை நடத்தி வந்த பெருநகர காவல்துறையின் சிறப்புக் குழு, புலன் விசாரணை மேற்கொண்டு, பெங்களூருவைச் சேர்ந்த ஒரு நபரிடமிருந்து 34 ஹார்ட் டிஸ்குகளை மீட்டது என்று காவல்துறை அதிகாரிகள் தெரிவித்ததாக சுட்டிக்காட்டியுள்ளது.

ஆண்டு பராமரிப்புக்கான ஒப்பந்த ஊழியர், அரக்கோணத்தைச் சேர்ந்த கோபிநாத் என்பவர், இந்த ஹார்ட் டிஸ்குகளை திருடி, பெங்களூருவில் உள்ள தனது கூட்டாளி மனோகர் என்பவருக்கு விற்றுள்ளதாக மூத்த காவல்துறை அதிகாரிகள் கூறியதாக குறிப்பிடப்பட்டுள்ளது. குறிப்பாக, ஹார்ட் டிஸ்குகளில் அழிக்கப்பட்ட தரவுகள் அனைத்தும் மீட்கப்பட்டுவிட்டதாகவும், ஆனால், அதில், குற்றச்சாட்டுக்குரிய தகவல்கள் எதுவும் இல்லை என்றும் காவல்துறை அதிகாரிகள் தெரிவித்தனர் என்றும், 'தி இந்து' ஆங்கில நாளேடு வெளியிட்டுள்ள கட்டுரையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம், மின்வெட்டு பிரச்சினையை திசை திருப்பும் த.வெ.க. அரசின் முயற்சி தோல்வியைத் தழுவியுள்ளது.

